# சந்திரிகா அரசின் தமிழ் இனப்படுகொலையைக் கண்டித்து

www.tamilarangam.net

# ஆர்ப்பாட்ட ஒன்றுகூடல்

சிறீலங்காவில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்களப் பேரினவாதப் பெருந்தலைவர்கள் எனப்படுவோர் எல்லோரும் தமிழினத்தின் நிணமும் குருதியும் தோய்ந்த வரலாற்றைத் தான் படைத்தார்கள். தமிழ் மக்களை கொன்று குவித்து, பிணக் குவியல்களின் மீது நின்று கொண்டு ஆட்சிக் கதிரைகளை தக்கவைத்தார்கள்.

இந்த இனவாதத் தீயில் எமது மக்கள் காலகாலமாக கருக்கப்பட்டார்கள். புதுத் தளிர் காணும் தோறும் பொசுக்குவேன் எனச் சபதமேற்ற சிங்கள பேரினவாதியான சந்திரிகா "முன்னோக்கிப்பாய்தல்" எனப் பெயர் சூட்டப்பட்ட நடவடிக்கை மூலம் தமிழ்மக்களை கொன்றொழிப்பதற்கான யுத்தப் பிரகடனம் ஒன்றைச் செய்திருக்கிறார்.

பலாலியில் உள்ள முப்படைகளின் கூட்டுப்படைத்தள முகாமில் இருந்து பாரிய விமானத்தாக்குதல்கள், செல் வீச்சுக்கள், ஆட்லறித் தாக்குதல்களை நிகழ்த்திய வண்ணம் காலை 10-7-1995 5.30 மணிக்கு பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இந்த இன அழிப்பு நடவடிக்கையில் இறங்கினர்.

★ இந்த இராணுவ நடவடிக்கையின் போது முன்னூறுக்கும் அதிகமான மக்கள் கொல்லப் பட்டார்கள்.

★ இதுவரை மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அவர்களின் பராம்பரிய பூமியிலேயே அகதிகளாக் கப்பட்டுள்ளனர்.

★ வீடுகள், மனைகள், பாடசாலைகள், தேவாலயங்கள் பெருத்த சேதத்திற்குள்ளாகியிருக்கின்றன.

★ புக்காரா, சுப்பர் சொனிக் விமானங்களின் குண்டுவீச்சுத் தாகக்குதல்களால் வீதிகள் எங்கும் தமிழர் சடலங்கள் சிதறிக் கிடக்கின்றன.

சந்திரிகா ஒரு பேரினவாதி. அவர் அணிந்திருந்த சமாதான முகமூடி அவிழ்ந்து தொங்குகிறது.

அவருக்கு ஒரு போதும் சமாதான முன்னெடுப்புக்களில் அக்கறை இருக்கவில்லை.

உலக அரங்கில், திட்டமிட்ட தமிழினப்படுகொலையை நிகழத்துவதற்கான எண்ணத்திலேயே பொய்யான பிரச்சார யுத்தத்தை செய்து வந்தார். பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும் போதே வெளிநாடுகளில் ஆயுதக் கொள்வனவுப் பேரங்களில் ஈடுபட்டார். பேச்சுவார்த்தை அவர் ஆடி முடித்த நாடகம். இன்று குருதி வழியும் கோரப் பற்களுடன் எங்கள் மண்ணின் வீதிகளில் வலம் வருகிறார்.

தமிழ் மக்களது அன்றாடப் பிரச்சினைகளை தீர்த்தது வைக்க முடியாது போன சந்திரிகா பெரும் படை எடுப்பை நிகழ்த்தி தமிழ் மக்களைக் கூண்டோடு அழித்து விடுவதற்கான யுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார். இந்த "முன்னோக்கிப் பாய்தல்" தமிழின அழிப்பை கருத்தில் கொண்டு இயங்குகின்றது.

உலகின் போர் விதிகளுக்கு ஒவ்வாத முறையில், காட்டுமிராண்டித்தனமான முறையில் மக்கள் குடியிருப்புக்களின் மீது, தேவாலயங்கள்மீது, கோயில்கள் மீது, பாடசாலைகள் மீது, மருத்துவமனைகள் மீது குண்டுகளை வீசி வருகிறது.

★ கொடூரமான இனப்படுகொலையை நிகழ்த்திக்கொண்டிருக்கிறது.

★ எமது சொந்தச் சகோதரர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

★ இலடச்சக்கணக்கானோர் அகதிகளாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தாயக மண்ணில் சுதந்திரமாக, கௌரவமாக, சந்தோசமாக வாழத்துடிக்கும் இனத்தின் ஆன்மாவை கொன்றுவிடத் துடிக்கிறார்கள்.

புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் மீதுள்ள வரலாற்றுக் கடனை நெஞ்சிருத்திச் செயல்பட வைக்கவேண்டிய நேரமிது.

www.tamilarangam.net

தமிழின அழிப்பு யுத்தத்தை தடுத்து நிறுத்தவும், எமது தாயக பூமியில் என்றும் அழியாத நிரந்தரமான சமாதனத்தை ஏற்படுத்துவதற்காகவும், குரல் எழுப்புவது, அதற்காக சகல வழிகளிலும் போராடுவது எம் முன் உள்ள எல்லாவற்றிலும் பார்க்க மிகப் பெரிய கடமை ஆகும். இதனை உணர்ந்து அனைத்து தமிழ் மக்களும் அணிதிரள வேண்டும்.

கொடிய, நெறிகளற்ற, நீதியற்ற, முறைகளில் முன்னோக்கிப் பாய்ந்த அனைத்தும் தங்களுக்கான புதைகுழிகளில் தான் விழுந்து மடிந்தன என்ற வரலாற்றை புதிய பாடமாக சந்திரிகா அரசு கற்கும்.

சிறீலங்கா அரசின் இனப்படுகொலைகளைக் கண்டித்து, உலக அரங்கில் நீதியை வலியுறுத்தக் கோரியும் இவ் ஆர்ப்பாட்ட ஒன்றுகூடல் நடைபெறும்.

புலம்பெயர்ந்து வாழும் உணர்வுள்ள தமிழீழ மக்களே!

இவ் ஆர்ப்பாட்ட ஒன்றுகூடலில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

# காலம்: 15-07-1995 சனிக்கிழமை
# பிற்பகல் 3.00 - 6.00 மணி வரை
# இடம்:

## PRAVIS DES DROITS DE L`HOMME
## (Metro: Trocadero)

● மனித உரிமைகள் மையம் ● தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
● தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ● தமிழ்பெண்கள்அமைப்பு.
● தமிழீழ மாணவர் அமைப்பு ● உதைபந்தாட்டச் சம்மேளனம்
● பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்

ஆகிய அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து இவ் ஆர்ப்பாட்ட ஒன்றுகூடலை நடாத்துகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

---

**தொடர்புகட்கு: 43 58 11 42**